**தலைப்பு 328 – மனிதவலு மற்றும் தொழிற்துறை திணைக்களத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, மனிதவலு மற்றும் தொழிற்துறை திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 328 – மனிதவலு மற்றும் தொழிற்துறைத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்டம்பர் 07 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மனிதவலு மற்றும் தொழிற்துறைத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. | பெறுகை நடவடிக்கை போதியளவு திட்டமிடப்படாமை. | 2.3(அ) |
| | | 2. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.8(அ) |
| | | 3. | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை. | 2.2(ஆ) |
| | | 4. | பெறுகை செயன்முறை செயற்படுத்துவதில் குறைபாடு | 2.3(ஆ)(இ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை.<br>2. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள். | 2.2(ஆ)<br>2.3(ஆ)(இ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | இணக்கமின்மை | 2.10 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும். | நட்டங்களும் சேதங்களும் | 2.6 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் காட்டப்பட்டிருந்த தொழிலாளர் தொகுதியின் உற்பத்திறனை மேம்படுத்தும் செய்பணியை நிறைவேற்றுவதற்காக இலத்திரனியல் மக்கள் தொழில் சேவை நிலையம் அபிவிருத்தி விடயத்திற்காக ரூபா 2 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தி இருந்த போதிலும் அவற்றில் எதிர்பார்த்த வெளியீடு (output) மட்டத்தை பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் மீது 2015 ஆண்டின் போது தேசிய மனிதவள மற்றும் சேவையில் ஈடுபடும் கொள்கையை செயற்படுதல் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைக்காக கணிணி முறைமையொன்றின் அபிவிருத்திற்காக ரூபா 8,335,000 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் கீழ் இந்த கொள்கையை செயற்படுத்துவதற்கு நேரடியாக பொருந்தும் என

இனங்காணும் நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் நிகழ்வு நிலையில் (Online) தொடர்பு ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் இந்த முறைமை செயற்படுத்தியிருக்கவில்லை. 2015 செப்டம்பர் 08 திகதி கொல்வனவு செய்திருந்த இந்த சொத்துக்கள் மற்றும் மென்பொருட்கள் மீளாய்வாண்டு இறுதிவரையும் விளைவற்று காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த தொழில் 10,577 ஆக காணப்பட்டதுடன் அது கடந்த ஆண்டிற்கு ஒப்பாக தொழிலில் அமர்தியோர் 3,597 இனால் வீழ்ச்சி அடைந்திருந்தது. 2017 ஆண்டின் மொத்த தொழில் செய்யாத மக்களின் தொகை 358,507 ஆக காணப்பட்டதுடன் அந்த பெறுமதிக்கு ஒப்பாக மொத்த தொழிலில் அமர்த்தி 3 சதவீதம் ஆகிய குறைந்த பெறுமதியாகும் அதன் பிரகாரம் வேலையின்மை குறைப்பதற்கான திணைக்களத்தின் பங்களிப்பு 3 சதவீதமாகும் . மேலும் 2017 ஆண்டின் போது பெண்களில் வேலை குறைப்பதற்காக விஷேட நிகழ்ச்சி திட்டங்கள் திணைக்களம் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 13 மாவட்டங்களில் நிறுவியிருந்த பொது மக்கள் தொழில் நிலையங்கள் (PES) கூட்டுத்தொகை 5063 தொகை தொழில் அமர்த்தும் இலக்கு என வழங்கப்பட்டிருந்த போதிலும் உண்மையான அந்த நிலையத்தினால் நெருங்கியிருந்த தொழில் அமர்த்துவோர் கூட்டுத்தொகை 2065 ஆகும் ஒட்டுமொத்த அளவை 40 சதவீதமாகும் அந் நிலையங்களை தனிப்பட்ட முறையில் கணிக்கும் போது தொழிலில் அமர்த்தியோர் நெருங்கி இருக்காத விகிதாசார 25 சதவிதம் முதல் 58 இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 2.2 பெறுகை செயன்முறையினுடாக வழங்கல்கள் சேவைகள் பெற்றுக் கொள்ளல்

### 2.2.1 பெறுகைகள் திட்டமிடல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றி கொள்வதற்காக ரூபா 2.3 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 2.2 மில்லியன் ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை திட்டம் தொடர்பாக அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2 இன் பிரகாரம் 2017 ஆண்டிற்கான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை நேரசூசி ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டின் போது திணைக்களத்தின் 34 உத்தியோகத்தருக்காக தொழில் வழிகாட்டல் டிப்ளோமா பாடநெறி ஒன்று ரூபா 1.8 மில்லியன் தொகைக்கு இலங்கை மன்ற நிறுவனத்திற்கு நடாத்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சி திட்டத்திற்காக மேலும் செலுத்த வேண்டியிருந்த ரூபா 846,000 தொகை 2017 மார்ச் 17 ஆந் திகதி செலுத்தியிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.5.1 (ஆ) இன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைக்காக நிதி கிடைக்க கூடுமென் சான்றிதழ் ஒன்று இன்றி பாடநெறிகள் பேணப்பட்டிருந்தது.

(இ) முன்னேற்ற மாதார் முகாமைத்துவ முறைமை தயாரித்தல் பாதீட்டு பிரேரனையின் பிரகாரம் 100 லப்டொப் கணிணிகள் கொல்வனவு செய்வதற்காக பெறுகை திட்டமிட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டப்பட்டிருந்த நிறுவனத்திற்கு அந்த தொகையினால் வழங்குவதற்காக இயலுகை இன்மையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திட்டமிட்டுள்ளவாறு அந்த 100 இயந்திரங்களுக்கு பதிலாக 70 இயந்திரங்கள் மாத்திரம் கொல்வனவு

செய்திருந்தமையால் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 2,987,700 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

தொழில் சந்தை தகவல் அலகினால் மீளாய்வாண்டின் போது ரூபா 845,785 இற்கு செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்ட நிதி, கடற்தொழில், அரச மற்றும் தொழில் பரப்புகள் தொடர்பாக 3600 கைநூல்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 1576 தொகை 2017 வருட இறுதியிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மற்றும் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

**2.4 ஈடுபாட்டு பொறுப்புகளும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஏப்ரல் 27 திகதி 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 02 ஆ பந்தியுடன் இணக்கம் 14 செலவு விடயங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 178.5 மில்லியன் ஏற்பாடுகள் ரூபா 2.3 மில்லியன் மிகைத்து ரூபா 4.9 மில்லியன் ஈடுபாடு பொறுப்பு ஒன்றினை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் அனுகியிருந்த ரூபா 226,383 தொகைக்கான பொறுப்புகள் பெறுமதி ஒன்று ஒதுக்கீட்டு கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.5 இழப்புகளும் சேதங்களும்**

ரூபா 118,000 தொகை பெறுமதியான மடி கணிணி இயந்திரம் ஒன்று களவாடப்பட்டமையால் நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் இழப்புகள் தொடர்பாக நேரடியாக அல்லது முறைசார் விதமாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தரின் இனங்காணல் மற்றும் மற்றும் நட்டத்ததை திருப்பி அறவீடு செய்தல் தொடர்பாக விதப்புரை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் தொட்ரபாக முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

2017 ஆண்டின் போது திறைசேரிக்கு சமர்பித்திருந்த பாதீட்டு பிரேரனை ஒன்றின் பிரகாரம் முன்னேற்ற மாதாந்த முகாமைத்துவ முறைமையொன்று நிறுவுல் திணைக்களத்திற்கு இணைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு மடி கணிணிகள் வழங்குதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குதல் 10 மில்லியன் ஏற்பாடு ஒன்று வழங்கப்பட்டடிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முகாமைத்துவ தகவல் முறைமை நிறுவுவதற்கு முடியாதிருந்ததுடன் தேவையான மடி கணிணி கொல்வனவு செய்து அதை வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வினியோகித்தல் மாத்திரம் நடைபெற்றிருந்தது முகாமைத்துவ தகவல் முறைமையொன்று நிறுவாமல் மடி கணிணி கொல்வனவு செய்து வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வினியோகித்தன் மூலம் மடிக்கணிணி கொல்வனவு செய்த குறிக்கோள்களுக்காக அவை பயன்படுத்தாமல் காணப்பட்டது.

## 2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | % |
| 2013 | மீண்டுவரும் | 244.00 | 196.39 | 47.61 | 19.51 |
| | மூலதன | 43.20 | 33.45 | 9.75 | 22.57 |
| | **மொத்தம்** | **287.20** | **229.84** | **57.36** | **19.97** |
| 2014 | மீண்டுவரும் | 249.37 | 249.27 | 0.10 | 0.04 |
| | மூலதன | 24.60 | 23.48 | 1.12 | 4.56 |
| | **மொத்தம்** | **273.97** | **272.75** | **1.22** | **0.45** |
| 2015 | மீண்டுவரும் | 312.30 | 310.14 | 2.16 | 0.69 |
| | மூலதன | 40.50 | 36.43 | 4.07 | 10.04 |
| | **மொத்தம்** | **352.80** | **346.57** | **6.23** | **1.76** |
| 2016 | மீண்டுவரும் | 330.45 | 328.83 | 1.62 | 0.49 |
| | மூலதன | 33.70 | 31.74 | 1.96 | 5.82 |
| | **மொத்தம்** | **364.15** | **360.57** | **3.58** | **0.98** |
| 2017 | மீண்டுவரும் | 356.20 | 350.06 | 6.14 | 1.72 |
| | மூலதன | 44.80 | 38.71 | 6.09 | 13.59 |
| | **மொத்தம்** | **401.00** | **388.77** | **12.23** | **3.05** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த ஏற்பாடுகள் ரூபா 200,000 தொகையில் ரூபா 146,559 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த விடயங்கள் எவை என திட்டம் ஏதும் பேணப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) மிகை ஏற்பாடுகள் வழங்கியிருத்தல்**

10 செலவு விடயங்களுக்கக கூட்டுத்தொகை ரூபா 9.98 மில்லியன் இற்கான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவு விடயங்களுக்கு உரிய ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 74.27 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 6 சதவீதம் முதல் 73 சதவீதம் வரை வீச்சு அளவு ஒன்றினை கொண்டிருந்தது.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்கான 32801 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18.00 | 9.67 | 11.00 | 11.25 | 55.00 | 36.00 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) நிதிப் பிரமாணம் 427 (1) இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய இணக்க கூற்றில் திறைசேரி கணிணி அச்சு பிரதி பிரகாரம் ஆண்டிற்கான வரவு வைத்தல் பெறுமதிகள் இடையே ரூபா 381,500 தொகையும் மற்றும் செலவு வைத்தல் பெறுமதிகள் இடையே ரூபா 286,430 இற்குமான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) முற்பணம் பீ கணக்கில் கடமையிலுள்ள மற்றும் உத்தியோகத்தர்களிடம் அறவிட வேண்டிய கடன் மீதி என காட்டியிருந்த பெறுமதி மற்றும் திணைக்களத்தினால் பேணப்பட்ட வரும் அங்கத்துவ கடன்பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள 15 அங்கத்தவர்களின் கடன் மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 249,551 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 2.9 இணக்கமின்மை

### 2.9.1 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 392 | 34,975 | 324600 ஆம் இலக்க காசோலை காணாமல் போயிருந்ததால் மீண்டும் பதில் காசோலை ஒன்று காப்புறுதி பிணை முறியொன்று பெற்றுக்கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்தது. |

(ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 30/2016 இல் 4.3 ஆம் பந்தி | - | திருத்த வேலை மேற்கொள்ளும் நிறுவனத்தின் கூறுவிலைகளில் நியாயத்தன்மை தொடர்பாக அரச துறையில் தகைமையுடைய இயந்திர பொறியியலாளர் ஒருவரின் அறிக்கை ஒன்று பெறவேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை |

(இ) பெறுகை வழிகாட்டல் கோவை

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் 2.4.8 | 235,120 | 2017 ஆண்டிற்கு செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் தொழில் சவால்களை வெற்றி கொள்ளல் ஆகிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கைநூல் அச்சிடப் பட்டிருந்த போதும் அரச பெறுகை வழிகாட்டல் கோவை பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வு மற்றும் பெறுகைக்கு குழு நியமனம் செய்திருக்காததுடன் பெறுகைகள் முறைசார் விதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

### 2.10.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 277.78 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 9 | 6 |
| (ii) | மூன்றாம் நிலை | 4 | 0 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 673 | 566 | 107 |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 13 | 2 |
| | மொத்தம் | 707 | 588 | 119 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இரண்டாம் நிலையில் காணப்படும் 107 ஊழியர் வெற்றிடங்களுக்காக திணைக்களத்தில் குற்க்கோளை செயற்படுத்துவதற்கு நேரடியாக தேவையாகும் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் 53 பேரினதும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 43 பேர் வெற்றிடமாகியுள்ளமை திணைக்களத்தின் செயலாற்றலை நேரடியாக பாதித்துள்ளது.